துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு , அருப்புக்கோட் டையில் நடந்த மாவட்ட அளவிலான செஸ் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பரிசு வழங்கினார். உடன் நகர் மன்ற தலைவர் சுந்தரலட்சுமி சிவபிரகாசம், முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், நகர செயலாளர் ஏ.கே. மணி, தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் பாலகணேசன், பொன்ராஜ் ஆகியோர் இருந்தனர்.

கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தருவதையொட்டி மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர் திருமதி.பெ. கீதாஜீவன் மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்கண்டேயன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநிலவர்த்தகர் அணி இணைச்செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர் மற்றும் கழக நிர்வாகிகளுடன் ஆய்வு செய்தபோது.

கழக ஆட்சியை குறை கூற முடியாதவர்கள்

தங்களை தாங்களே தண்டனை கொடுத்துக் கொள்கிறார்கள்!

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை, டிச. 28 -

சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் திருப்பத்தூரில் உள்ள தனியார் மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் வரவேற்று பேசினார்.செயற்குழு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும்,கூட்டுறவு துறை அமைச்சருமான கே.ஆர் பெரியகருப்பன் பேசியதாவது.

நம்முடைய மாவட்டத்திற்கு அடுத்த மாதம் 21, 2 2 தேதிகளில் காரைக்குடி சிவகங்கை ஆகிய ஊர்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நம்முடைய கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உறுதி செய்துள்ளார்கள். தமிழக முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு வரும்போதெல்லாம் நாம் எழுச்சியான வரவேற்பை கொடுத்து வரவேற்றுள்ளோம் . இந்த முறை அதையெல்லாம் விட சிறப்பான முறையில் காரைக்குடியில் இருந்து சிவகங்கை வரை அந்தந்த பகுதிக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக தோழர்கள் முதல்வர்அவர்களை சிறப்பான முறையில் வரவேற்க வேண்டும் .வரவேற்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டும். முதல்வர்அவர்கள் நமது மாவட்டத்திற்கு வருகைதருவது மிகவும் மகிழ்ச்சியானதாகும். தளபதி அவர்கள் நமது மாவட்ட சுற்றுப்பயணம் முடித்து விட்டு மனமகிழ்ச்சியுடன் செல்வார். தற்போது அதை மிஞ்சும் வகையில் இம்முறை வரவேற்பு நிகழ்ச்சி அமைந்திட வேண்டும். அந்த மகிழ்ச்சியை அதிக மகிழ்ச்சியாக்கி நாம் இந்த முறை அவரது சுற்றுப்பயணத்தை அமைத்து தர வேண்டும். அதற்கு அனைவரும் நாம் ஒன்றுபட்டு



இப்பொழுது முதலே பணியாற்ற வேண்டும். 21 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை திருச்சியில் இருந்து காலை காரைக்குடி வரும் முதல்வர் அவர்கள் ஐயன் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள ஐயன் திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றுகிறார். அதனை தொடர்ந்து முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் பாராளுமன்ற மேலவை உறுப்பினர் ப.சிதம்பரம் எம்.பி. முயற்சியால் கட்டப்பட்டுள்ள முழுவதுமான தமிழ் புத்தக நூலக கட்டிடத்தினை திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார். மாலை 4 மணியளவில் காரைக்குடி பி.எல்.பி. பேலசில் கழக நிர்வாகிகளை சந்தித்து உரையாடுகிறார். அன்று இரவு காரைக்குடி தங்குகிறார்.22ம்தேதி புதன் கிழமை காலை காரைக்குடியில் இருந்து கார்மூலமாக குன்றக்குடி பிள்ளையார் பட்டி திருப்பத்தூர் பைபாஸ் சாலை வழியாக சிவகங்கைக்கு செல்கிறார். சிவகங்கை யில் முதல்வர் அவர்கள் அரசு மன்னர் துரைசிங்கம் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரம்மாண்ட மேடையில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார். அன்று மதியம் மதுரை செல்கிறார். அடுத்ததாக பி.எல்.சி 10 நபர்கள் அடங்கிய விண்ணப்ப படிவம் 100க்கு 10 பேர் ஒரு பி எல் ஏ உள்பட 11 பேர் கொண்ட படிவத்தைஜனவரி 6ம் தேதிக்குள் பூர்த்தி செய்து தரப்பட வேண்டும் .அதில் கண்டிப்பாக இளைஞரணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணியினர் இடம் பெற வேண்டும். இந்த பணியினை விரைவாக நாம் முடித்து தலைமை கழகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். தலைமைக்கழகம் இடும் பணிகளை உடனடியாக செய்திட வேண்டும். இதில் தாமதிக்க கூடாது. தமிழக அரசியல் நிலவரங்கள் இந்திய அரசியல் நிலவரங்கள் கழகத்திற்கு இணையாக எந்த மாநிலத்திலும் இல்லாத நிலை உள்ளது. இது எதிர்க்கட்சியினரிடையே வயிற்றெரிச்சலை ஏற்படுத்தி உள்ளது.இதனால் அவர்கள் நம் மீது நமது ஆட்சி மீது எந்த சிறு குறை கூற முடிய வில்லை. ஆங்காங்கே ஒரு சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடக்கலாம். இதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு விரைவாக தொடர்ந்து எடுத்து வருகிறது .ஆனால் இதை சிலர் பெரிதாக்குகிறார்கள். அவர்களது அரசியல் பணியாக அமைந்துள்ளது. தமிழக அரசியல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், தலைவர் கலைஞர் , மூதறிஞர் ராஜாஜி ஆகியோரால் பக்குவப்பட்டு அரசியல் வளர்த்த பூமியாகும். ஆனால் ஒரு சில அரைவேக்காட்டு அரசியல்வாதிகள் அரசியல் பக்குவம் இல்லாமல் தன் மீது சாட்டை யால் அடித்துக் கொள்கிறார்கள். சாமியார்கள் தான் சாட்டை அடித்துக் கொள்வது வழக்கம். இவர்களுக்கு ஆட்சி மீது குறை கூற முடியாததால் வயிற்று எரிச்சலில் தங்களுக்கு தாங்களே தண்டனை கொடுத்துக் கொள்கிறார்கள். சிறிய சம்பவத்தை பூதாகரமாக எடுத்து கூறுகிறார்கள். மிகப்பெரிய மாநிலத்தில் இது போன்ற ஒரு சில சம்பவங்கள் நடைபெறுவது நடவடிக்கை. இதை தடுக்கவும் இந்த சம்பவத்தினை ஒடுக்கவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறது .பா.ஜ.க ஆட்சி புரியும் மாநிலங்களில் பல்வேறு சம்பவங்கள் நடந்து வருகின்றது. அதற்காக நாம் எந்த விதத்திலும் அவர்களை குறை சொல்லவில்லை. சிறிய சம்பவங்களை பெரிதாக்கி சித்தரிப்பு செய்து சூழ்ச்சி வலையை பின்னுகிறார்கள் . இதை நாம் கண்டு கவலைப்பட வேண்டியதில்லை.மக்கள் அவர்களின் செயலை பார்த்து கொண்டிருக்கிறார்கள் இவர்களுக்கு தக்க பதிலடி தருவார்கள். நாம் நமது அரசியல் பணியினால் அவர்களுக்கு தகுந்த பதில் கூற வேண்டும் . நம்மால் அவர்களுக்கு அதை உணர்த்திட முடியும். எனவே இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் கழகத் தலைவர் தளபதி அவர்களின் வழியில் அவர் காட்டும் திசையை நோக்கி பயணிப்போம் .ஒற்றுமையுடன் செயல்படுவோம் . இவ்வாறு அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பேசினார். திருப்பத்தூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன் நன்றி கூறினார். இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி .ஆர்.பெருமாள், பள்ளத்தூர் கே.எஸ்.ரவி ,த.உதயகுமார், எம்.சோமசுந்தரம், பி.டி..ஆர் .முத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் , மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் மாவட்ட சிறுபான்மைநல அணி அமைப்பாளர் என். எம்.சாக்ளா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, மாவட்ட கவுன்சிலர் ஏ .டி. என். ரவி, நகர கழகச் செயலாளர்கள். சி.எம். துரை .ஆனந்த், க.பொன்னுச்சாமி, பெரி.பாலா, என்.குணசேகரன்,ஒன்றிய கழக செயலாளர்கள் கே .பாலசுப்பிரமணியன், பூமணி, விராமதி மாணிக்கம் ,குன்னக்குடி சுப்பிரமணியன், நா. நெடுஞ்செழியன், நாகனி ரவி, பூபால சிங்கம், லெ.மு. ரவிச்சந்திரன். கே.எஸ். ஆனந்த், ஆர். எம் .கென்னடி, வே.ஆரோக்கியசாமி யோக.கிருஸ்ணகுமார், ஆறு. செல்வராஜன், வே. தமிழ்மாறன் கா.வெங்கட்ராமன், துரை ,ராஜாமணி, எம் .அண்ணாதுரை, எம். ஏ. கடம்ப சாமி, பி.செல்வராஜ், பேருர்கழக செயலாளர்கள் நாகூர் கனி, அசோக், கே.பி.எஸ்.பழனியப்பன், கதிர்வேல், பி.ஏ.நஜ்முதீன் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன், துணைத் தலைவர் கான் முகமது, ராம. ரவி, திருநாவுக்கரசு, ஒன்றிய பொருளாளர் ஏ.எம்.கண்ணன், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், விவசாய அணி பா. காளிமுத்து தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன், பிள்ளை யார் பட்டி சதீஷ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ்.நாராயணன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் திலகவதி கண்ணன், தெரசா,மகளீரணி மார்க்ரெட் கமலா, பேரூராட்சி மன்ற தலைவர் ராதிகா,மீனவரணி அண்ணா மலை, மாரி, தோக்கப்பன், புலிக்குட்டி, இளைஞரணி மாரி கண்ணன், அ.அயூப்கான், சிவபுரி சேகர், எம்.எஸ். அலாவுதீன், உட்பட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். செயற்குழு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1.முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது . இரண்டு நிமிடம் மவுனம் கடைபிடிக்கப்பட்டது.

2.வருகிற ஜனவரி மாதம் மூன்றாவது வாரத்தில் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகைதரும் கழகத்தலைவர் தமிழக முதல்வர் அவர்களை சிறப்பான முறையில் உற்சாகத்துடன் வரவேற்க தீர்மானிக்கப்பட்டது.

நெல்லை கிழக்கு, மத்திய மாவட்டங்கள் மற்றும் மாநகர

கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

நெல்லை கிழக்கு, மத்திய மாவட்ட மற்றும் நெல்லை மாநகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (28.12.2024 – சனிக்கிழமை) காலை 10 மணியளவில் நெல்லை வர்த்தக மையத்தில் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல், மத்திய மாவட்ட அவைத் தலைவர் முருகன் ஆகியோர் தலைமையில் கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அதுசமயம் மாவட்ட, மாநகரக் கழகங்களின் நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. அய்யன் திருவள்ளூர் சிலை வெள்ளி விழா – முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை. 2.கழக ஆக்கப் பணிகள்.

அமைச்சர் கே.என். நேரு
முதன்மைச் செயலாளர்
தி.மு.க.

தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்ச் செல்வன் எம்.பி., கம்பம் நகரில் உள்ள கம்பராய பெருமாள் கோயிலில் நடைபெற்று வரும் திருமண மண்டப கட்டிட பணிகளை நேரில் ஆய்வு செய்து கட்டிடப் பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டார். ஆய்வின் போது வழக்கறிஞர் துரை நெப்போலியன், தெற்கு நகர துணை செயலாளர் செல்வம், வார்டு செயலாளர் உதயகுமார், வேல்பாண்டியன், கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள், அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் உடனிருந்தனர்,

தூத்துக்குடி, கன்னியாகுமரி, நெல்லை, தென்காசி, தேனி வழக்கறிஞர்கள் பங்கேற்கும்

மாவட்டக் கழக, தி.மு.க. சட்டத்துறை தென் மண்டலம் - 1 ஆலோசனைக் கூட்டம்

கே.எஸ்.ரவிச்சந்திரன் தலைமையில் - அமைச்சர்கள் பி.கீதாஜீவன் -அனிதா.ஆர்.ராதா கிருஷ்ணன், தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி.-மனோ தங்கராஜ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

தூத்துக்குடி, டிச.28-

தி.மு.க.சட்டத்துறை தென் மண்டலம் 1 தூத்துக்குடி வடக்கு,தெற்கு,மாநகரம்கன்னியாகுமரி கிழக்கு, மேற்கு,மாநகரம் -திருநெல்வேலி கிழக்கு, மத்திய,மாநகரம் தென்காசி வடக்கு, தெற்கு தேனி வடக்கு, தெற்கு மாவட்டங்கள் மாவட்ட, மாநகர கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெறுகிறது.

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் தலைமையில் 28.12.2024 சனிக்கிழமை காலை 9 மணிக்கு தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் அமைச்சர் பி.கீதா ஜீவன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் மற்றும் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ஆனந்தசேகரன் ஆகியோர் முன்னிலையில் வழக்கறிஞர் அணி வடக்கு, தெற்கு, மாவட்ட அமைப்பாளர்கள் குபேர் இளம் பரிதி, வி.பி.செல்வகுமார் மாநகர அமைப்பாளர் ரூபஸ் ஆகியோர் ஏற்பாட்டின் கீழ் நடைபெறுகிறது.

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் தலைமையில் 28.12.2024 சனிக்கிழமை மதியம் 12 மணியளவில் கன்னியாகுமரி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து மேயர் ஆர்.மகேஷ் கன்னியாகுமரி தெற்கு மாவட்ட செயலாளர், டி.மனோ தங்கராஜ் எம்.எல்.ஏ., கன்னியாகுமரி வடக்கு மாவட்ட செயலாளர், மாநகர கழக செயலாளர் பி.ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் வழக்கறிஞர் அணி தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் குமார சேரலாநாதன், ஜோசப் ராஜ் மாநகர அமைப்பாளர் சாகயதேவன் ஆகியோர் ஏற்பாட்டின் கீழ் நடைபெறும்.

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் தலைமையில்

28.12.2024 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து டி.பி.எம். மைதீன்கான் திருநெல்வேலி மத்திய மாவட்ட பொறுப்பாளர், இரா.ஆவுடையப்பன் திருநெல்வேலி கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகர கழக செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் வழக்கறிஞர் அணி மத்திய, கிழக்கு மாவட்ட அமைப்பாளர்கள் காமினிதேவன், செல்வ சூடாமணி மாநகர அமைப்பாளர் மு.சுரேஷ் குமார் ஆகியோர் ஏற்பாட்டின் கீழ் நடைபெறும் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் தலைமையில் 28.12.2024 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் தென்காசி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைத்து ஜெயபாலன் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், ராஜா ஈஸ்வரன் எம்.எல்.ஏ, தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஆகியோர் முன்னிலையில் வழக்கறிஞர் அணி தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் தங்க ராஜ் பாண்டியன், பிச்சையா ஆகியோர் ஏற்பாட்டின் கீழ் நடைபெறும்.

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன்

தலைமையில் 29.12.2024 ஞாயிறு காலை 9 மணியளவில் தேனி ஏ.பி.எம். கிராண்ட் ஹோட்டலில் வைத்து தங்கதமிழ்ச் செல்வன் எம்.பி., தேனி வடக்கு மாவட்ட செயலாளர், கம்பம் நா.ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் ஆகியோர் முன்னிலையில் வழக்கறிஞர் அணி வடக்கு, தெற்கு மாவட்ட அமைப்பாளர்கள் பொ.ஆசைத் தம்பி, தனுஷ்கோடி ஆகியோர் ஏற்பாட்டின் கீழ் நடைபெறும் ஆலோசனை கூட்டங்களில் கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவேண்டுகிறோம்.

தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி அருகே டி.ராஜகோபாலன் பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட வைகை அணை சாலை ஜெ.ஜெ நகரில் 24 மணி நேரமும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் அமைக்கப்பட்ட குடிநீர் தொட்டியை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன், ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். உடன் ஊராட்சி மன்ற தலைவர் வேல்மணி, மாவட்ட கவுன்சிலர் ஜி.கே பாண்டியன், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மண்டபம் பேரூராட்சியில் திடீரென மின்சார கம்பி உரசியதில் தீப்பற்றி எரிந்த வீட்டினை இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., பார்வையிட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கிற வீட்டின் உரிமையாளருக்கு நிதியுதவி வழங்கி ஆறுதல் தெரிவித்து விரைவில் புதிய வீடு கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். உடன் இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றிய தலைவர் கே.டி.பிரபாகரன், ஒன்றிய செயலாளர் முத்துக்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் பேரூராட்சி சிவகாமி புரத்தில் பேரூராட்சி பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வழங்கினார். நிகழ்வில் பேரூராட்சி மன்ற தலைவர் ராஜன், மாவட்ட பிரதிநிதி பொன் செல்வன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.